REGD. No. M. 6311

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 21உ புதன் (5—1—55) ★ ★ வெளியூர்: மார்கழி 22உ வியாழன் (6—1—55) [இதழ் 176

நறுமணம் கமழும் ரயில் நிலையங்கள்

பாரிஸ், ஜன. 4—

பூமிக்கு அடியில் உள்ள ரயில்வே நிலையங்களில், காற்று, சுவாசிப்பதற்குத் தகுதியானதாக இல்லையாம்.

இக்குறையைப் போக்கவும், அதிகப் பிரயாணிகளின் மனதை இந்த ரயில்களில் செல்லுமாறு தூண்டவும், இந்த ரயில்வே நிலையங்கள், நறுமணம் கலந்த காற்றினால் நிரப்பப்படும் என்று தெரிகிறது.

ஒரே விதமான நறுமணம் இருந்தால் பிரயாணிகள் அலுத்துப்போவார்களாதலால், அடிக்கடி வெவ்வேறு நறுமணக் காற்றுகளை 'குழாய்'கள் மூலம் வெளியிடுவார்களாம்.

விஞ்ஞான உலகில் துரோணச்சாரிகள்!

'ஆரிய ஆசிரியர் வழியைபின்பற்றுக'

அணுகுண்டையும் மிஞ்சிடும் அழிவு நெஞ்சம்!

விஞ்ஞான மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவரின் நாசக் கருத்து

பரோடா, ஜன. 4—

"முற்கால இந்திய ஆசிரியர்கள் மேற்கொண்ட வழியைப் பின்பற்றி, தாங்கள் கற்றுள்ள வித்தையை, அதைப் பெறும் தகுதியுள்ளவர்களுக்கு மட்டுமே கற்பிக்க வேண்டும்."

"மனித குலத்தின்பால் தங்களுக்குள்ள அறநெறிக் கடமையை உணர்ந்து, விஞ்ஞான இரகசியங்களை தராதரம் பாராமல் அனைவருக்கும் போதிக்கக்கூடாது என அவர்கள் உறுதி பூண வேண்டும்."

—இவ்வாறு, பரோடாவில் நடைபெற்ற 42-வது இந்திய விஞ்ஞான காங்கிரஸ் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவியரான அன்கா மேதா அம்மையார், தனது வரவேற்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:—

"அழிவை இயல்பாகக் கொண்டுள்ள விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை, தனித் தனி அரசாங்கங்கள் பயன்படுத்துவதிலிருந்து தடை செய்ய, ஒரு அகில உலக அதிகார அமைப்பினிடம் அவைகள் ஒப்படைக்கப்பட வேண்டும். இவ்வேற்பாடு செயலாற்றப்படும் வரை, விஞ்ஞானத்தின் உதவியால், அதிகப்படியான அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில், ஒவ்வொரு அரசாங்கமும் போட்டியிட்டுக்கொண்டுதான் இருக்கும். அமைதியை நிலைநாட்டுவதற்காக, மற்றவர்களை அச்சுறுத்தி அவர்களைச் சண்டையிடாமல் தடுக்க, இந்தக் கருவிகளைத் தோற்றுவித்து அமைதியைக் காணும் முறையானது, மிகமிக அபாயகரமானதாகும். இதனால் அச்ச உணர்வு உருவாகிறது; இதனால் ஐயப்பாடும், ஒருவரை ஒருவர் தவறாக அறிந்து கொள்ளும் நிலையும் ஏற்படுகிறது; இது, எதிர்பாராத விளைவுகளில் கொண்டு போய் விட்டுவிடும்."

"அணு பிளக்கப்பட வேண்டியது கட்டாயமாகுமானால், மனிதனை உயர்த்துவதற்காக அது பிளக்கப்பட வேண்டுமே அல்லாது, அவனுடைய அழிவுக்காக அப்படி செய்யப்படவே கூடாது."

22 நீதிபதிகள் பதவி துறந்தனர்

கார்ட்டூம், ஜன. 4—

சூடான் நாட்டுப் பிரதம நீதிபதியும், அவரோடு வேறு 21 நீதிபதிகளும் தங்கள் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்கள் என்று கூறப்படுகிறது. இவர்கள் அனைவரும் பிரிட்டனைச் சேர்ந்தவர்களாவர்.

சூடான் நாட்டு நிர்வாகங்களனைத்தையும் சூடானிய மயமாக்கும் திட்டப்படி, இன்னும் ஆறு திங்களுக்குள் இவர்களது பதவிக் காலம் முற்றுப் பெறுகிறது. அந்தக் காலவரைக்குள்ளாகவே இவர்கள் 22 பேரும் பதவியைத் துறந்து விட்டார்கள்.

'வாய்ச் சொல்லில் வீரடி கிளியே!'

"ஜாதி, வர்க்கபேதம் எதுவுமின்றி மக்கள் எல்லோரும் சம சந்தர்ப்பத்துடன் வாழக்கூடிய ஒரு சோஷலிச சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்ற குறிக்கோளை நோக்கி நாட்டை முன்னேற்றவேண்டும்,"

என்று பரோடாவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், பிரதமர் நேரு கூறியிருக்கிறார்.

பருத்தி ஜவுளித் தொழில், பட்டு, ரேயான் ஜவுளித் தொழில், செயற்கைப் பட்டுத் தொழில் ஆகியவைகளுக்கு கைத்தொழில் அபிவிருத்தி நிபுணர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவர் உணவு விடுதிகளுக்கு ஜாதிப் பெயர்கள் கூடாது

சென்னை சர்க்கார் அரிசன அபிவிருத்தி இலாகா உத்தரவு

ஜாதிப் பெயரை மாற்றாவிடில் மானியம் நிறுத்தப்படும் என்று எச்சரிக்கை

திருநெல்வேலி, ஜன. 4—

பொது நிதியிலிருந்து உதவி பெறும் மாணவர் உணவு விடுதிகள் எவற்றுக்கும் ஜாதியைக் குறிப்பிடும் பெயர்கள் இருக்கக் கூடாது என்று சென்னை சர்க்கார் அரிசன அபிவிருத்தி இலாகா அதிகாரி உத்தரவிட்டிருக்கிறார்.

ஜாதிகளைக் குறிப்பிடும் பெயர்கள் கொண்ட விடுதிகளின் பெயர்களை, அந்த விடுதிகளை அமைக்கக் காரணமாக இருந்த தலைவர்களின் பெயரிலேயோ, அல்லது அந்த விடுதி அமைந்திருக்கும் ஊரின் பெயரை ஒட்டியோ மாற்ற வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறதாம்.

பெயர்களை மாற்றாவிட்டால் அந்த விடுதிகளுக்கு சர்க்கார் அளித்து வரும் மானியங்கள் இந்த ஆண்டு ஏப்ரலுக்குப் பின்னர் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை சர்க்கார் அரிசன அபிவிருத்தி இலாகா, ஏராளமான உணவு விடுதிகளுக்கு மானியம் அளித்து வருகிறது என்றும், அவைகளில் பெரும்பாலானவை ஜாதியின் பெயரைக் குறிப்பிடும் தன்மையில் உள்ளன என்றும் கூறப்படுகிறது.

அரசியல் சட்டப்படி, நாட்டிலே ஜாதி முறைகள் கிடையாது என்பதை இப்போது பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு எடுத்துக் காட்டுகிறதாம்!

பாரத 'புண்ணிய பூமி'யில்!

இடமொதுக்கல்கொடுமைக்கு ஆதிபீடம்

வடவர் தலைநகரில் சாதிப் பேயாட்டம்

புதுடில்லி, ஜன. 5—

இந்திய அரசியல் சட்டத்தில் 'ஷெட்யூல்ட்' வகுப்பினருக்கு பாதுகாப்புகளும், உறுதியும் தரப்பட்டிருந்த போதிலும், நாட்டில் அவர்கள் பலவகை கஷ்டங்களுக்கு ஆளாக்கப்படுவதாக ஷெட்யூல்ட் வகுப்பு கமிஷனர் தமது அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

புதுடில்லி நகர நீதிபதி அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் பானையிலிருந்து சில ஷெட்யூல்ட் வகுப்பினர் தண்ணீர் எடுத்துக் குடித்ததற்காக அவர்களை, அந்த நீதிமன்றத்திலிருந்த அதிகாரிகள் வசைபாடினார்களாம். மேலும் அரிசனர்கள் தொட்டுவிட்டதால் தீட்டுப்பட்டுவிட்ட அந்த பானைக்குப் பதிலாக வேறு பானை வாங்குவதற்காக அவர்களிடமிருந்தே பானையின் கிரயத்தையும் வசூலித்தார்களாம்.

வேறு பல இடங்களில்கூட, குறிப்பிட்ட இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் வீடுகட்டி வசிப்பதை அனுமதிப்பதில்லை என்றும் தகவல் கிடைத்துள்ளது என்றும், இத்தகைய கஷ்டங்களிலிருந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு விடுதலை பெற்றுத்தர புதிய சட்டம் மக்கள் சபையில் நிறைவேற்றப்படும் என்றும் தெரிகிறது.

மத்திய அரசாங்கம், ரூ. 11,54,816 செலவில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிணறுகளும் வீடுகளும் கட்டித் தருவதாகவும் அறியக்கிடக்கிறது.

சோவியத் ரஷ்யா, செஞ்சீனா ஆகிய நாடுகளுடன் வர்த்தக உறவை வளர்ப்பதற்கு தூதுக் குழுக்களை அனுப்பப் போவதாக ஜப்பான் பிரதமர் ஹாடோயாமா கூறியிருக்கிறார்.

தொழிலதிபர்கள்: இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர்

பண்டிதர் கூறுகிறார்

"நமது நாட்டுத் தொழிலதிபர்கள் இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்களேயன்றி, இயந்திரங்களை நிர்மாணிக்க முயற்சி எடுப்பதில்லை. இது வெட்கக்கேடான ஒன்றாகும். ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நாட்டில் நூற்றுக்கணக்கான ஜவுளி ஆலைகள் இருந்தும், அவற்றுள் ஒன்றுகூட புதிய இயந்திரங்களைத் தயாரிக்கத் துவங்கவில்லை."

"இயந்திர உற்பத்தித் தொழில் இல்லாமல் அபிவிருத்தித் திட்டங்களை மட்டும் வகுத்துவிடுவதால் பயனில்லை; அதுதான் அஸ்திவாரம்—அணிவேர்,"

இவ்வாறு, பரோடாவில் நடைபெற்ற விஞ்ஞான மாநாட்டு தொழிற் கண்காட்சியை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் பிரதமர் நேரு கூறியிருக்கிறார்.

சென்ற எட்டு ஆண்டு காலமாக இப்பகுதியில் அமுல் செய்யப்பட்டு வந்த அரிசிப் பங்கீடு இப்போது நீக்கப்பட்டுவிட்டது.

தாயைக் கொன்றனர்!

குட்டிகளைப் பாதுகாக்கின்றனர்!

தினசரி ரூ. 2-8-0 செலவில் 4-நாய்க் குட்டிகளுக்கு உணவு!

சீயோர் நகர சபையினர் கருணையே கருணை!

போபாலுக்கு 25 கல் தொலைவில் உள்ள சீயோர் நகராட்சி மன்றத்தினர் நான்கு நாய்க்குட்டிகளைப் பாதுகாக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ளனர். மேற்படி மன்றத்தின் ஒரு மூலையில், தாயை இழந்த அந்த நாய்க்குட்டிகள் தங்கியுள்ளன. அக்குட்டிகளின் உணவிற்காக தினசரி ரூ. 2-8-0 செலவிட நகரசபை அனுமதித்துள்ளது.

தாயைக் கொன்றவர்களும் இந்த நகர பிதாக்கள்தான். அதாவது, கடந்த பதினைந்து தினங்களில், நகர முழுவதிலும் நோய்வாய்ப்பட்டுக்கிடந்த 60 நாய்களை நகர சபை நாசம் செய்துவிட்டது. அந்த நாய்களில், மேற்படி நான்கு நாய்க் குட்டிகளின் தாயும் ஒன்றாகும்.

தாயை இழந்து தவித்திடும் நாய்க் குட்டிகளின் சோகக் கதையைக் கேள்வியுற்ற நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நாய்க் குட்டிகளிடம் இரக்கம் கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ளதுபோல் ஏற்பாடு செய்துள்ளனர்.

கைத்தறி உடுத்தி களிப்புறுவீர்

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 5—1—1955 புதன்

மதுரை வாரீர்!

மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள் ஜனவரித் திங்கள் 8, 9-ந் தேதிகளில் மதுரை மாநகரில் நடைபெறவிருக்கின்றன.

மதுரை—'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்' என்று தமிழர்கள் முழங்குகிறார்களே, அந்தத் தமிழுக்கு—முச்சங்கங்கள் நிறுவி, முக்கலையும் கண்டு, வளர்த்த பாண்டிய நாட்டின் தலைநகர்தான் மதுரை.

முப்பெரும் தமிழ் வேந்தரில் மூத்த புகழுடைய பாண்டியன் பரம்பரையினர், வீரத்தோடும், நெஞ்சில் ஈரத்தோடும் செங்கோல் வழுவாது, செம்மையுறக் கோலோச்சிய வளமிகு நகர்தான், மதுரை.

அந்த மதுரையில்தான்வாழ்ந்தோம் நாங்கள்—இதோ எங்கள் மூதாதையர் எழுப்பிய வானை முட்டும் கோபுரங்கள்—வரலாற்றுச் சின்னங்கள் இதோ!—என்று எடுத்துக் காட்டி, இழந்த வாழ்வை மீண்டும் பெறத் துடிக்கும் திராவிடரின் இன எழுச்சிக் குரல், உரிமை முரசம் மீண்டும் அங்கு எழுப்பப்பட இருக்கிறது.

பண்டைத் தமிழக வரலாற்றிலுஞ் சரி, நிகழ்கால அரசியல் சரித்திரத்திலுஞ் சரி—மதுரை தனக்கென ஒரு தனிச் சிறப்பும் பெருமையும் கொண்ட நகரமாகும்.

வீரரின் வேலின் ஒளியும், வேல் விழியாளின் புன்னகை ஒளியும் ஒன்றையொன்று போட்டியிடும் காட்சியையும், மறக்குடி மக்களின் மாண்பு மிகு வாழ்வுச் சிறப்பையும் அவர்தம் மன்னவரின் மாண்புறு ஆட்சியின் மாட்சியையும் கவின்பெறு கவிதைகளாய் வடித்துத் தந்த கவிஞர் பெருமக்களும் வாழ்ந்த அதே மதுரைமா நகரில், 'நரி'யைப் 'பரி'யாக்கும் திருவிளையாடல்களும் நடைபெற்றதாகவே கூறப்படுகிறது.

பொன் ஓர்புறமும், மணியும் முத்தும் மற்றோர்புறமும் குவித்து வாணிபஞ் செய்த பொன்னாடு, பாண்டிய நாட்டுத் தலைநகரம்—தஞ்சம் என்று வந்தோர்க்கு, 'அஞ்சேல்' என்றுரைத்து, அவர்தம் நெஞ்சம் உணர்ந்து, உவகையுடன் வாழ்வளித்த மன்னர் மரபினர் வாழ்ந்த நகரம்—நீதிக்கு நிலைக்களனாய், நேர்மைக்கு இருப்பிடமாய் கோன்முறை வழுவாது கோலோச்சிய வெண்கொற்றக் குடை வேந்தர்கள்' என்ற பாராட்டுக்குரிய பாண்டியன் பரம்பரையினர் ஆண்ட தலைநகரம்—என்ற சீரும் சிறப்பும் பெற்றது மதுரை என்பதை தமிழக வரலாறு சொல்லும்.

'தமிழ் எங்கள் இளமைக்குப் பால்—இன்பத் தமிழ் எங்கள் கவிதைக்கு வைரத்தின் வாள்' என்ற அருமையைப் பெற்ற இன்பத் தமிழ், ஆரியத்தின் வருகையால்—அவர்தம் சவ மொழியால் சிதைக்கப்பட்டதும், வேலும் வில்லும் வாளும் கேடயமும், கோட்டையும் கொத்தளமும் பெற்றிருந்த இடங்களை, புல்லும் புரிநூலும், திருமண்ணும் வெண் சாம்பலும், பஜனை மடமும் மத்தளச் சத்தமும் நிரப்பியதும், வாழ்ந்த தமிழ் மரபு—திராவிட இனம் வீழ்ந்ததும், அடிக்கடி நாம் நினைவுபடுத்திப் பார்த்துக் கொள்ள வேண்டிய வரலாற்றுச் சம்பவங்கள்.

நாம் நாடாண்ட பரம்பரையினர்; வளமுற வாழ்ந்தவர்கள்; நம் மூதாதையர் உலவிய பூமி, அவர்கள் எழுப்பிச் சென்ற அழியாத சின்னங்கள் இதோ என்னும் வகையில், மதுரையின் வரலாறும் அமைந்திருக்கிறது.

அத்தகு வரலாற்றுச் சிறப்பு மிகுந்த நகரில் திராவிடரின் தேசிய இயக்கமான முன்னேற்றக் கழகம் மாற்றாரும் மருளும் வகையில் வளர்ந்திருக்கிறது என்பதை நாடு நன்கறியும்.

"காவியங்களும், ஓவியங்களும் சித்தரிக்கும் இன்ப வாழ்வு இன்று எங்களுக்கில்லைதான்; ஆனால் நாங்கள் வீர மறக்குடிப் பிறந்த மக்கள்; பாண்டியன் பரம்பரையினர்; அவர் மரபினருக்கிருந்த மாண்பும், மறமும் எங்களிடமிருந்து மறைந்துவிடவில்லை," என்று சூளுரைக்கும் திண்தோள் வீரர்கள் நிரம்பிய மாவட்டம்தான் மதுரை.

அந்த. செயலாற்றும் செம்மல்கள், தங்கள் மாவட்டத்தில் நடத்தும் மாநாடுகள், சிறப்புற அமைந்திருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல.

முதல் நாள் சமூக சீர்திருத்த மாநாடு முன்னேற்றக் கழகத்தின் முன்னோடும் வீராங்கனைகளில் ஒருவரான தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் கழக முன்னணி வீரருள் ஒருவரான தோழர் தில்லை வில்லாளன் திறந்துவைக்க, நடைபெறவிருக்கிறது.

இரண்டாம் நாள் அரசியல் மாநாடு ஆரூர் இளவல் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில், திராவிட சட்ட சபைக் கட்சிச் செயலாளர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் திறந்து வைக்க நடைபெறவிருக்கிறது.

நாட்டு நிலைகள்—நாம் அடிக்கடி எடுத்துச் சொல்லி வருபவைதானே—'தெற்கு தேய்ந்து வடக்கு வளமிக வாழவுமான நிலைகள் வளர்ந்து வருகின்றன; நமது கோரிக்கைகள் பல, ஆட்சியாளர்களால் அலட்சியப்படுத்தப்படுகின்றன; இந்த நெருக்கடி மிகுந்த நேரத்தில்தான் மதுரை மாநகரில், நமது உரிமைக் குரலை எழுப்ப கூடப்போகிறோம்.

நாட்டில் அன்றாடம் நிலவும் பல்வேறு அரசியல் நிகழ்ச்சிகளில் ஒன்றாயிராமல், சிறப்புற விளங்கப்போகும் அந்த மாநாடுகள், நாட்டை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளுக்கு நல்லதோர் முடிவு காணும் என்று நம்புகிறோம்.

அந்த மாநாட்டில் ஆயிரமாயிரமாகக் கலந்துகொண்டு கடமையாற்ற வாரீர் என்று திராவிடத் தோழர்களை அழைக்கிறோம்.

15 லட்சம் டன் அரிசி தேக்கம்

மத்திய அரசாங்கத்திற்கு நஷ்டம் வருவது தவிர்க்கமுடியாததாம்

சென்னை, ஜன. 3—

மத்திய அரசாங்கம் தன்னிடம் இப்போதுள்ள 15 இலட்சம் டன் அரிசியை எப்படி உபயோகிப்பது என்ற பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதாயுள்ளது.

நாட்டில், உணவுக் கட்டுப்பாடு நீக்கப்படும்போதே இந்தப் பிரச்சினை உருவாகுமென்று தாங்கள் எதிர்பார்த்ததாயும் மத்திய உணவு உதவி மந்திரியான எம். வி. கிருஷ்ணப்பா குறிப்பிட்டிருக்கிறார்.

பின், ஏன் பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்கிறீர்கள் என்று கேட்டபோது, அவர், பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்வது என்பது மிகப் பழைய ஒப்பந்தப்படியாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இப்போதுள்ள அரிசியை எப்படியாவது விநியோகித்தாக வேண்டுமென்றும், இதில் ஏதேனும் நஷ்டம் வருவது தவிர்க்க முடியாத ஒன்று என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஜனநாயகம் சரிவர இயங்க...

இரு கட்சிகளே இருக்க வேண்டுமாம்!

ராஜ்கோட், ஜன. 3—

"ஜனநாயகம் ஒரு நாட்டில் சரியான வழியில் இயங்குவதற்கு நிரம்பக் கட்சிகள் இருக்கக் கூடாது; இன்னும் சொல்லப்போனால் இரண்டு கட்சிகளுக்கு மேல் இருத்தலாகாது; அவை இரண்டும், ஒன்று அரசாங்கத்தை நடத்துவதாகவும், மற்றொன்று எதிர்க் கட்சியாகவும் இயங்க வேண்டும்,"

என்று, மக்கள் சபைத் தலைவர் ஜி. பி. மாவ்லங்கர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், நாட்டில் இப்போதுள்ள கட்சிகளின் எண்ணிக்கை அதிகமென்றும், இப்படிப் பல கட்சிகளை வளர்க்கிற நிலை மாற வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

சந்தர்ப்பவாதிகளுடன் காங்கிரஸ் கைகோர்த்துக் கொண்டது!

கட்சியில் ஊழல்மலிந்துபோனதால் வெளியேறினோம்

ஆந்திர காங்கிரசின் சர்வாதிகார போக்கு பற்றி புதிய கட்சித் தலைவர் விளக்கம்

சித்தூர், ஜன. 3—

"காங்கிரஸ் கட்சிக்குள் காணப்படும் சர்வாதிகாரமும், கட்சியில் காணப்படும் ஊழல்களும்தான் காங்கிரசுக்குள்ளே பிளவு ஏற்பட்டமைக்குக் காரணமாகும்,"

என்று, சித்தூர் பகுதி காங்கிரசிலிருந்து பிரிந்து சென்று, புதிதாகத் துவக்கப்பட்ட 'சுதந்திரக் காங்கிரஸ் சங்க'த்தின் தலைவர் கூறினார்.

சித்தூர் பகுதியில் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதில் காங்கிரஸ் கட்சியினர் ஒழுங்கு மீறி நடந்துகொண்டனர் என்று 16 பேர் இராஜினாமா செய்து, புதிய கட்சி ஒன்றைத் துவக்கியது நினைவிருக்கக்கூடும்.

அக்கட்சியின் தலைவர், அறிக்கை ஒன்றில் கூறுவதாவது :—

"சித்தூர் தொகுதிக்குக் காங்கிரஸ் அபேட்சகராக டி. சீனுவாச ஐயங்காரைத் தேர்ந்தெடுக்காததால்தான் நாங்கள் காங்கிரசிலிருந்து இராஜினாமா செய்தோம் என்று பலர் நினைக்கிறார்கள்; இதுதான் முக்கிய காரணம் என்று கருதுகிறார்கள்.

ஆனால், அதற்கு மற்ற காரணங்களும் உள்ளன. சர்வாதிகாரப்போக்கு காங்கிரஸ் கட்சியினுள் நுழைந்துவிட்டது. தேவைப்படாத—விரும்பத்தகாதவர்கள் கட்சியில் ஆதிக்கம் செலுத்துவதும், வகுப்புவாதம் நிறைந்து காணப்படுவதும்தான், நாங்கள் ராஜினாமா செய்வதற்குக் காரணங்களாகும். மற்றவர்களுடன் கூட்டுசேரவேண்டுமென்பதற்காக சந்தர்ப்பவாதிகளுடன் சேர்ந்து கொண்டு காங்கிரசின் அடிப்படைக் கொள்கைகளை சமரசத்துக்கு வைப்பதுபோன்ற செயல்கள், எங்களைக் காங்கிரசிலிருந்து வெளியேறுமாறு கட்டாயப்படுத்திவிட்டன.

ஆகவே, ஊழல் மயமாக இருக்கும் காங்கிரஸ் கட்சிக்குள் இருந்துகொண்டு பொது மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்வதென்பதற்கு இடமேயில்லை."

தொழிலியல் முதலீடு நிறுவனம்

டாக்டர் ஏ. ஆர். முதலியார் தலைமையில் அமைகிறது

தனிப்பட்ட முதலாளிகளுக்குக் கடன்உதவரூ 17½கோடி முதலீடு

பம்பாய், ஜன. 3—

'இந்திய தொழிலியல் கடன் முதலீடு கார்ப்பொரேஷன்' என்ற நிறுவனம் இந்த வாரத்தில் இந்தியக் கம்பெனிகளின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் என்று நடைமுறைக் கமிட்டித் தலைவர் டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டன் முதலாளிகள் ஒரு கோடி ரூபாய் பெறுமான பங்குகளும், அமெரிக்க முதலாளிகள் ரூ. 50 இலட்சம் பெறுமான பங்குகளும் வாங்கியுள்ளனர் எனத் தெரிகிறது.

இந்திய பாங்குகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள் மற்றும் சிலநிறுவனங்கள் ஆகியவை ரூ. 2 கோடிக்கும், பொதுமக்கள் ரூ. 1½ கோடிக்கும் பங்குகள் பெற்றுள்ளனர்; மொத்த மூலதனம் ரூ. 5 கோடி; ஒரு பங்கின் மதிப்பு ரூ. 100 ஆகும்.

மத்திய அரசாங்கம் இந்த நிறுவனத்திற்கு ரூ 7½ கோடி வட்டியில்லாமல் கடன் தந்துள்ளனர். இந்தக் கடனை 15 ஆண்டுகளில் ஆண்டுத்தவணைகளாகத் திருப்பித் தந்தால் போதுமானதாம்.

உலக பாங்கியும் ரூ. 5 கோடி கடன் தந்து உதவியுள்ளதாம்.

நிறுவனத்தின் டைரக்டர்கள் போர்டின் முதல் தலைவராக டாக்டர் ஏ. இராமசாமி முதலியாரே இருக்கக்கூடும் எனத் தெரிகிறது.

அமெரிக்கப் பருத்தி

1,20,000 பேல் இறக்குமதியாகும்

நீண்ட இழையுள்ள பருத்தி சுமார் ரூ. 9½ கோடிக்கு 1955-ம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் என்று தெரிகிறது.

இந்தியாவுக்கு அமெரிக்கா அளிக்கும் உதவி திட்டத்தின்மூலம் இப்பருத்தி இறக்குமதி செய்யப்படும்.

விவசாயப் பொருள்களையும் இந்தியாவிற்கான உதவித் திட்டத்தில் சேர்த்திருப்பதாக அமெரிக்கா அறிவித்ததும், பருத்தி பற்றி பேச்சு வார்த்தைகள் துவங்கின. இப்போது 1,20,000 பேல் நீண்ட இழை பருத்தி இறக்குமதிக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாம்.

இப்பருத்தி எப்போதும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் அளவுக்குள் அடங்கியதே என்று சொல்லப்படுகிறது.

அமெரிக்க மக்கள் தொகை

அமெரிக்கா சுமார் 16,39,00,000 மக்கள் தொகையுடன் புத்தாண்டில் காலெடுத்து வைப்பதாக அமெரிக்க 'சென்சஸ் பீரோ' குறிப்பிடுகிறது.

இது 1954-ல் இருந்ததை விட 27 லட்சம் அதிகமாகும்.

1950-ல், பொதுக் கணக்கெடுப்பின் போது அமெரிக்காவின் மக்கள் தொகை, இப்போதிருப்பதைக் காட்டிலும் ஒரு கோடியே 52 லட்சம் குறைவாயிருந்ததாம்

"உணவின் உருசி உண்பதில் உணரப்படும்"

'தொழில் திட்டத்தின் மதிப்பு வேலையற்றோர் தொகையினால் நிர்மானிக்கப்படும்"

ஜெய்ப்பூர், ஜன. 4—

"மக்களுக்கு முழு வேலை வசதி செய்து தருவதைப் பொறுத்தே நமது பொருளாதாரத் திட்டம் மதிப்பிடப்படும்; இந்த இலட்சியத்தை முதல் ஐந்து ஆண்டுத் திட்டத்தில் எய்த முடியவில்லை; சமீப ஆண்டுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டது; கைத்தொழில்களை பரவலாக ஏற்படுத்த திட்டமிடப்படாவிடில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையைத் தீர்ப்பது சாத்தியமல்ல,"

—இவ்வாறு, அகில இந்திய வர்த்தக மாநாட்டின் இறுதிக் கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் பொதுச்செயலாளர் எஸ். என். அகர்வால் கூறியிருக்கிறார்.

மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"வேலையன்றி இருக்கும் லட்சோபலட்சம் மக்களுக்கு வேலை தேடித் தருவதே நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினையாகும். வேலையின்றித் தவிப்போருக்கு நிதி உதவுவதோ, பிச்சை அளிப்பதோ போதுமானதல்ல; தங்கள் வாழ்க்கைக்கு சம்பாதிக்க அவர்களுக்கு வேலை தர வேண்டியது முக்கிய கடமையாகும்.

"சில மூலாதாரத் தொழில்களை விரிவான அளவுக்கு ஏற்படுத்த வேண்டுமென்பது உண்மையே வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களைப் பரவலாக ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம்."

சர்க்கரை ஆலைகளை தென்னாட்டிலே அதிகம் துவக்குவார்களாம்

உணவுப் பொருள் சேகரித்துவைக்க 10 கோடி ரூபாய் செலவில் கிடங்குகள் கட்டப்படுமாம்

மத்திய உணவு உதவி மந்திரி தகவல்

சென்னை, ஜன. 3—

நாடெங்கிலும் பல்வேறு பகுதிகளிலும் சேமித்து வைக்கப்பட்டுள்ள கையிருப்பு உணவு தானியங்களை சேகரித்து வைப்பதற்கு ரூ. 10 கோடி செலவில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் கிடங்குகள் கட்டும் திட்டத்திற்கு திட்டக் குழு கொள்கையளவில் சம்மதித்திருப்பதாக உதவி உணவு மந்திரி எம். வி. கிருஷ்ணப்பா இன்று இங்கு தெரிவித்திருக்கிறார்.

சர்க்கரை கட்டுப்பாடு நீங்கியதும், 12 லட்சம் டன்னுக்குப்பதில் 15 அல்லது 19 லட்சம் டன் செலவாகிறது என்றும், தென்னிந்தியாவில் சர்க்கரை ஆலைகள் அதிகம் நிறுவப்படும் என்றும், இங்குள்ள கரும்பில் சத்து அதிகம் என்றும், ஏக்கருக்கு அதிக விளைச்சல் அதாவது ஏக்கரில் 40 முதல் 50 டன் (வட இந்தியாவில் 15 டன்தான்) இருக்கிறதென்றும் கூறினார். ஆகவேதான் தென்னிந்தியாவில் அதிக சர்க்கரை ஆலைகள் நிறுவ உத்தேசித்திருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

பரம்பரை வியாதி அல்ல க்ஷயரோகம்!

கொச்சி கோட்டை, ஜன. 2—

க்ஷயரோகம் பரம்பரையான நோய் அல்லவென்றும், பிறந்த பின்னர்தான் இந்த நோய் மனிதனைப் பீடிக்கிறதென்றும், இதைக் குறைப்படுத்திவிடலாமென்றும் சென்னை மாநில க்ஷயரோக சங்க மத்தியக்குழு உறுப்பினரும், சென்னை வைத்திய இலாகா முன்னாள் தலைவருமான டாக்டர் கே. வாசுதேவ ராவ் கூறியிருக்கிறார்.

“இந்த வியாதி பீடித்துள்ளவரை ஆரம்பத்திலேயே தனியாக ஒதுக்கிவைக்கவேண்டும்; நோய் நீங்கியவர்களின் புனர்வாழ்வுக்காக காலனிகளை ஏற்படுத்தி தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்; மக்களிடையே க்ஷயரோக ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்துப் பிரச்சாரம் செய்யவேண்டும்”—என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

க்ஷயரோகத் தடுப்புக்காக பி. சி. ஜி. ஊசி போடுவது பற்றி டாக்டர் வாசுதேவ ராவ் கருத்தறிவிக்கையில், இதனால் நேரடிப் பலன்கள் எதையும் அதிகமாக எதிர்பார்க்க இயலாது என்றும், ஆனால், இன்னும் சில ஆண்டுகளில் பி. சி. ஜி. ஊசி போட்டுக்கொண்டவர்கள் க்ஷயரோகத்தினால் மடிவது நிச்சயம் குறையுமென்றும் அவர் கூறியுள்ளார்.

கடனைத் திருப்பித் தராத செக் நாடு

உலக பாங்கியிலிருந்து நீக்கப்படுகிறது

உலக பாங்கியின் உறுப்பினர் பதவியினின்றும் செக்கோஸ்லாவேக்கியா நீக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது; எனவே, அது சர்வதேச நிதி நிறுவனத்திலும் தனது அங்கத்தினர் பதவியை இழந்துவிடுமாம்.

8 வருடங்களாக $6\frac{1}{4}$ லட்சம் டாலர் கடனைத் திருப்பிக் கொடுக்கத் தவறியதே உலக பாங்கி இந்த நடவடிக்கை எடுத்ததற்குக் காரணமாம்.

ரஷ்யா அணுகுண்டு பரிசோதனை செய்ததாம்

டோக்கியோ, ஜன. 2—

சோவியத் யூனியன் பிரதேசத்தில் டிசம்பர் 6—8 தேதிகளுக்கு இடையே சாதாரண முறையில் அணுகுண்டு பரீட்சை ஒன்று நடைபெற்றிருக்க வேண்டும் என்று ஜப்பானிய விஞ்ஞானி ஒருவர் கூறினார்.

கதிர் இயக்க மாறுதல்களினால், சோவியத்தில் அணுப் பரீட்சை நடைபெற்றிருக்க வேண்டுமென தாம் யூகித்ததாக அவர் மேலும் கூறினார்.

ஜப்பான் வடக்கு கோடியில் உள்ள ஹோன்ஷூவில் சென்ற டிசம்பர் திங்கள் பிற்பகுதியில் கதிர் இயக்கம் நிமிடத்திற்கு 451 தடவைகள் வீதம் இருந்ததாம்.

சைபீரியாவிலிருந்து வந்த சூழ்நிலைகளினால் இக்கணக்கு எடுக்கப்பட்டதாம்.

மொராக்கோவில் போலீசார் கொலை

கசபிளாங்கா, ஜன. 2—

சர்தாகர் செப்டி என்ற மொராக்கோ நகர துணி வியாபாரி ஒருவர் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டாராம்.

ரபாட் அருகே உள்ள போலீஸ் நிலையம் ஒன்றிற்கு வெளிப்புறத்தில் இன்று நடு இரவில் போலீசார் ஒருவரை பயங்கரவாதி ஒருவன் சுட்டுக் கொன்று விட்டதாக தெரிகிறது.

மண் பாண்டம் செய்ய பயிற்சி அளிக்கிறார்களாம்

கருமான், தச்சு வேலைக்கும் பயிற்சியாம்

அதற்கான திட்டத்திற்கு ரூ. 60 இலட்சமாம்

சென்னை மாநிலத்தில் குடிசைத் தொழில் அபிவிருத்திக்காக ரூபாய் 60 இலட்சம் செலவில் தீட்டப்பட்டுள்ள பல திட்டங்களுக்கு மாநில கதர் கிராமத் தொழில் போர்டு சம்மதம் தந்திருப்பதாகத் தெரிகிறது.

இவற்றில் சில திட்டங்கள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவிருப்பவையாம்.

அந்த ‘போர்டு’ அங்கீகரித்துள்ள திட்டங்களின் விபரம்:—

மதுரை மாவட்ட கல்லுப்பட்டியில் கைமூலம் காகிதம் தயாரிக்கும் ‘பிரிவு’ நிறுவுவது; மேற்கு கடற்கரை பகுதியில் மரம் பக்குவப்படுத்தும் தொழில் நிலையத்தை அமைப்பது; திண்டுக்கல்லில் பூட்டுத் தொழில் துவங்குவது; வேப்ப எண்ணெய் மூலம் சோப் தயாரிக்கும் கழகத்தையோ, தொழிற்சாலையையோ நிறுவுவது (இடம் குறிக்கப்படவில்லை); இரு கருமான் பட்டரைப் பயிற்சிப் பிரிவுகளும் பிரம்பு வேலை, மண் பாண்ட வேலை இவற்றிற்குப் பயிற்சிப் பிரிவுகள் ஆகியவற்றை சௌகரியமான இடங்களில் துவங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

வியட்மினுக்கு சீனாவின் பொருளாதார உதவி

ரயில்வேக்கள் திருத்தி அமைக்கப்படும்

ஹனோய், ஜன. 3—

வியட்நாம் குடியரசுக்கு (வியட்மின்) கம்யூனிஸ்டு சீனா உதவி செய்யும் ஒப்பந்தம் ஒன்று சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறதாம். இந்த ஒப்பந்தத்தின்படி வியட்நாம் குடியரசின் ரயில்வே, செய்திப் போக்குவரத்துக்களைப் புனரமைக்க சீனா உதவும் என்று தெரிகிறது.

இந்த ஒப்பந்தம் பற்றிய விவரங்கள் கூட்டறிக்கை ஒன்றின் மூலம் சமீபத்தில் பீகிங், ஹனோய் ஆகிய நகரங்களில் வெளியிடப்பட்டன.

ஹனோயிலிருந்து சீன எல்லையோர நகரமான டோங் டாங் வரையில் ரயில் பாதை அமைக்கப்படுமாம். ரயில்வே எஞ்சின்கள், போகிகள் முதலியனவற்றைச் சீனா கொடுக்கும் என்று தெரிகிறது.

இப்போது வியட்மினின் செய்திப் போக்குவரத்தில் வெளியுலகத் தொடர்பு குறைந்து இருக்கின்றதாம். இதற்கு, சீனா போதுமான உதவி செய்யும் என்று தெரிகிறது.

பெரிய சாலைகளை அமைக்கத் தேவையான இயந்திரங்களையும் உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்கான சாதனங்களையும் சீனா கொடுத்து உதவுமாம்.

சீனாவுக்கும் — வியட்நாம் குடியரசுக்கும் இடையே பொருளாதார உதவித் தொடர்பு ஏற்படுவது பாராட்டத் தக்கது என்று வியட்நாமில் கருதப்படுகிறதாம்.

மதுவிலக்கு அமுல்....

போலீசாரே மேற்கொண்டனர்

சென்னை, ஜன. 3—

சென்னை மாநிலம் முழுவதும் மது விலக்கை அமுல் செய்யும் பொறுப்பை போலீசாரே இன்று முதல் மேற்கொண்டுள்ளனர்.

சென்னை நகரிலும், மற்றும் ஏழு மாவட்டங்களிலும் இன்று முதல் போலீசார் பொறுப்பேற்றுள்ளனர்.

வேறு ஆறு மாவட்டங்களிலும் ஏற்கனவே மதுவிலக்கு அமுல் பொறுப்பு போலீசாரிடம் வந்தாயிற்று.

சென்னை நகரில் இதுவரை மது விலக்கை அமுல் நடத்தும் பொறுப்பு கலால் இலாக்காவிடம் இருந்துவந்தது.

ஒரு மதுவிலக்கு அதிகாரி மேற்பார்வை செய்து வந்தார். தற்காலிக ஏற்பாடாக மதுவிலக்குப் போலீசார் உயர்தர போலீஸ் அதிகாரிகளின் கீழ் தொடர்ந்து வேலை செய்து வருவர் எனத் தெரிகிறது.

விலகினார்

“திருவள்ளூர் — (செங்கற்பட்டு வட்டம்) தமிழரசுக் கழக முன்னாள் துணைச் செயலாளர் தோழர் கி. ஆனந்தன் தமிழரசுக் கழகத்தினின்றும் விலகி 27—12—54ல், திருவள்ளூர் தி. மு. கழக உறுப்பினராகச் சேர்ந்தார்” என்று அறிவிக்கப்படுகிறது.

பர்மிய அமைச்சர் சென்ற படகு

கம்யூனிஸ்டுகளால் தாக்கப்பட்டது

ரங்கூன், ஜன. 3—

பர்மிய உள்நாட்டமைச்சர் சென்றுகொண்டிருந்த படகு ஒன்றின்மீது பர்மிய கம்யூனிஸ்டுகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

இப்படகில், அமைச்சரும், அவரது குடும்பத்தாரும் கலாதன் நதி மூலம் அக்யாப் நகருக்குச் சென்றார்களாம். அவர்கள் சென்ற மோட்டார் படகுக்கு பாதுகாப்பாகப் பர்மிய கப்பற்படைப் படகுகள் சென்றனவாம். யாருக்கும் காயமில்லை என்று தெரிகிறது.

சிகப்புக் கொடியுடன் வந்த கம்யூனிஸ்டுகள், கயான்மால் என்ற இடத்தின் எல்லைப்புற போலீஸ் நிலையம் ஒன்றைத் தாக்கி, நான்கு ‘ரைபிள்’களை எடுத்துச் சென்றனராம்.

அரக்கான் பகுதியில் கம்யூனிஸ்டுகளின் தீவிரம் அதிகமாகியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

* *

மதுரை மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

மதுரை ஆரப்பாளையம் ஞானஒளிவுபுரத்தில் அமைந்துள்ள சௌந்திரபாண்டியனார் பந்தலில் நடைபெறும்

8—1—55 சனி:	9—1—55 ஞாயிறு:
சமூக சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர்: சத்தியவாணிமுத்து	தலைவர்: மு. கருணாநிதி
திறப்பாளர்: தில்லை வில்லாளன்	திறப்பாளர்: எம். பி. சுப்பிரமணியம், M.L.A.

இரு நாட்களிலும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், காஞ்சி கல்யாணசுந்தரம், க. அன்பழகன், சி. பி. சிற்றரசு, கி. மனோகரன், அ. பொன்னம்பலனார், கண்ணதாசன், டி. கே. சீனிவாசன் ஆசைத்தம்பி, ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., அரங்கண்ணல், கே. வி. கே. சாமி, தங்கப்பழம் இளம்வழுதி, வி. எம். ஜான், இளமுருகனார், கே. ஆர். ராமசாமி, எம். எஸ். ராமசாமி, சுரதா, தோழியர்கள் அருண்மொழி, பூங்கோதை ஆகியோர் கலந்துகொள்வார்கள்

8—1—55 இரவு 10½ மணிக்கு	9—1—55 இரவு 10½ மணிக்கு	இரு நாட்களிலும்
எஸ். எஸ். இராசேந்திரன்	எம். ஜி. இராமச்சந்திரன்	நாகூர் அனீபா,
குழுவினர் நடிக்கும்	குழுவினர் நடிக்கும்	பி. எஸ். செல்வா
‘சந்திரமோகன்’	**‘ஆசை நினைவு’**	**இசை நிகழ்ச்சிகள்**

இரு நாட்களுக்கும் அனுமதி விவரம்: (நாடகங்கள் உட்பட)

வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி ரூ. 2; பார்வையாளர் ரூ. 1; பெண்களுக்கு அணா 8

—வரவேற்புக் குழுவினர்

* *

காலனி பிரச்சினை

பிரிட்டன் மீண்டும் வழிகாட்டுகிறது

மேற்கிந்தியத் தீவுகளில் தனது காலனிகளாயுள்ள பல பகுதிகளுக்கு அதிகமான ‘உரிமை’களுடன் கூடிய சுயாட்சி வழங்க பிரிட்டன் சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

அவைகளில் ஐந்து காலனிகளான கிரெனடா, செயின்ட் லூசியா, செயின்ட் வின்சென்ட், ஆண்டிகுவா, செயின்ட் கிரிஸ்தாபர் நெவிஸ் என்பவற்றிற்கு புதிய அரசியல் சட்டங்கள் தயாராகி விட்டதாக, பிரிட்டிஷ் காலனி அலுவலகம் அறிவித்துள்ளது.

பிரிட்டிஷ் ராணி, அப்புதிய சட்டங்களில் கையொப்பமிட்டதும் இப்போது, ஜமைக்கா, டிரினிடாட், பார்படோஸ் போன்ற காலனிகளிலிருப்பதைப் போல மந்திரி சபையாட்சி வழங்கப்படும் எனத் தெரிகிறது.

பதிலுக்குப் பதிலாம்!

வாஷிங்டன், ஜன. 3—

ரஷ்யாவில் அமெரிக்கருக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்குப் பதில் நடவடிக்கையாக அமெரிக்காவில் உள்ள ரஷ்யர்களுக்கு புது பிரயாணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளனவாம்.

மீன் பிடிப்பு தொழிலுக்கு பயிற்சிப் பள்ளிகள்

பம்பாய், ஜன. 2—

மீன் பிடிப்புத் தொழிலை வளர்ப்பதற்காக முக்கிய நகரங்களில் மீன் பிடிப்புப் பாடசாலைகளையும், பயிற்சி நிலையங்களையும் அமைக்க இந்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

பெரிய அணைக்கட்டுகள் மூலம் 50 லட்சம் ஏகரா நில விஸ்தீரணத்துக்கு நடப்பு ஆண்டு முடியும்போது, நீர்ப்பாசனம் நடக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறள் வகுப்பு

28—12—54 பிற்பகலில் சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில் நடைபெற்ற குறள் வகுப்பில், திரு. மயிலை சிவமுத்து ‘புறங்கூறாமை’ என்பது பற்றிய பத்துப் பாடல்களையும் விளக்கிப் பேசினார். பின்னர், தோழர்கள் வாணிதாசன், அழகுவேலன், நா. அறிவழகன் ஆகியோர் குறளின்சிறப்பு, தாய்மார் கழக முயற்சி—வளர்ச்சி—தொண்டு, ‘வள்ளுவர் உள்ளம்’ ஆகியவை பற்றிப் பேசினர்.

மதுரை - மாநாடு

3—1—55 பிற்பகல் 3 மணிக்கு, மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர்களின் அவசரக் கூட்டம், மதுரை 4, கட்ராபாளையம் மாநாட்டு அலுவலகத்தில், தோழர் தா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்ற போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன :—

1. மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவர் என்ற பொறுப்பான முறையில் உள்ள தோழர் அய்யாசாமி, மாநாட்டு காரியத்தில் எத்தகைய குறைபாடு இருப்பதாகத் தோன்றினும், வரவேற்புக் கமிட்டியிடமோ தலைமைக் கழகத்திடமோ புகார் கூறியிருக்க வேண்டுமே தவிர கண்டன அறிக்கை வெளியிட்டிருக்கக் கூடாது; எனவே, கழகத்தை இழிவுபடுத்தும் முறையிலும் வரவேற்புக் கமிட்டியை அவமானப் படுத்தும் வகையிலும் அவர் அறிக்கை வெளியிட்டதைக் கண்டிப்பதுடன், மாநாட்டுச் செயலாளர் பொறுப்பிலிருந்து தோழர் அய்யாசாமியை நீக்கிவிடுவதென்று இக்கூட்டம் முடிவு செய்கிறது.

2. மாநாட்டு வேலைகளைத் தொடர்ந்து நடத்த தோழர் முத்து அவர்களுக்கு இக்கூட்டம் அதிகாரம் அளிக்கிறது.

★

விளக்கமும் வேண்டுகோளும்

இதுபற்றி 35 வரவேற்புக் குழு உறுப்பினர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையின் சுருக்கம் :—

" மதுரை மாவட்ட தி. மு. கழக மாநாடு சம்பந்தமாக பொது மக்கள் மனதில் சந்தேகம் எழத்தக்க வகையிலும், கழகத் தோழர்கள் மனம் புண்படும் முறையிலும் தோழர் அய்யாசாமி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது கண்டு நாங்கள் மிகவும் வருந்துகிறோம்.

" தோழர் அய்யாசாமி மேற்படி மாநாட்டில் செயலாளர்களில் ஒருவர்; தோழர் முத்து மற்றொரு செயலாளர்—அவர் மாநாட்டு காரியங்களைச் செவ்வனே செய்து வருகிறார். சில காலமாகவே தோழர் அய்யாசாமி மனத்தாங்கல் கொண்டிருக்கிறார் ; இதன் காரணமாக மாநாடு நடத்துவதே தாமதிக்கப்பட்டு, தலைமை நிலையத்தால் அனுப்பி வைக்கப்பட்ட தோழர் என். வி. நடராசன் அவர்கள் மூலம் ஒரு சமரச ஏற்பாடு செய்யப்பட்டது ; தோழர் அய்யாசாமி, அறிக்கை விடுவதற்கு முன்தினம் வரையில்கூட, மாநாட்டு வேலைகளை ஓரளவு செய்துகொண்டு வந்தார் ; இப்போது என்ன காரணம் கொண்டோ, புகார் கிளப்புகிறார்.

" தனக்கும், மாநாட்டுக்கும் சம்பந்தமில்லையென்றும், தனது தவறிப்போன கையெழுத்து அச்சு டிக்கெட்டுகளில் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாகவும், எவ்வளவு டிக்கெட்டுகள் அச்சாயின - செலவாயின என்பது தமக்குத் தெரியாது என்றும் அறிக்கையில் குறிப்பிடுகிறார்.

" ஆதை, அவர், முறைப்படி சொல்ல வேண்டியது, வரவேற்புக் கமிட்டியிடமோ, அல்லது தலைமைக் கழகத்திடமோதான் ; அறிக்கை விடுவதின் மூலம், அவர், வேணுமென்றே விஷமம் செய்ய விரும்புகிறார் என்பது விளக்கமாகிறது.

" மாநாடு டிக்கெட்டுகளில் இவர் கையெழுத்து மட்டுமல்ல—மற்றோர் செயலாளரான முத்துவின் கையெழுத்தும் இருக்கிறது. டிக்கெட்டுகளின் எண்ணிக்கை, விற்பனை விவரம், வரவு-செலவு யாவும் வரவேற்புக் கமிட்டியினராகிய நாங்கள் பரிசீலனை செய்வோம் என்பது பொறுப்புணர்ந்த பொது மக்களுக்குத் தெரியும் ; தலைமைக் கழகமும் இந்தக் காரியத்தைக் கவனிக்கும் ; எனவே, வீண் புகார் செய்து, கழகத்தின் பெயருக்குக் களங்கம் ஏற்படச் செய்யும் போக்கைக் கண்டிக்கிறோம்.

" இதுவரையில் தோழர் அய்யாசாமி செயலாளர் பதவியிலிருந்து விலகவுமில்லை—வரவேற்புக் கமிட்டியிடம் முறைப்படி புகார் கூறவுமில்லை ; எனவே, அவருடைய போக்கைக் கண்டிக்கும் முறையில் அவரை செயலாளர் பொறுப்பிலிருந்து நீக்கிவிடுவதுடன், மாநாட்டு வேலைகளைத் தொடர்ந்து நடத்த மற்றோர் செயலாளரான தோழர் முத்துவுக்கு அதிகாரம் அளிக்கிறோம்.

" எத்தகைய விஷமத்தனங்கள் நடைபெற்றாலும், மாநாட்டை சீரும் சிறப்புமாக நடத்த கழகத் தோழர்களும் பொதுமக்களும் ஆதரவு அளிக்கக் கோருகிறோம்.

" மாநாட்டு வரவு-செலவு சம்பந்தமாக, எத்தகைய புகாருக்கும் இடமின்றி, வரவேற்புக் கமிட்டி தன் கடமையைச் செய்யும் என்று உறுதி அளிக்கிறோம்."

மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாடுகள்

"8, 9—1—55-ல் மதுரை—ஆரப்பாளையம், ஞானஒளிவுபுரத்தில், சௌந்திரபாண்டியனார் பந்தலில் நடைபெறும் மேற்படி மாநாட்டுப் பந்தல் வேலைகளை மேலமாசி வீதி தங்கமுத்து, இரத்தினம், அழகரடி கிட்டு ஆகிய மூவரும் ஏற்று, வேலை முடியும் தருவாயிலிருக்கிறது.

மின்சார அலங்காரம், பந்தல் முகப்பு அமைக்கும் வேலைகளை தோழர்கள் பலராம், 'ஒளி ஒவியம்' இராசாராம் இருவரும் ஏற்று, முகப்பைச் சிறப்பான முறையிலும் கருத்தோடும் அமைத்து வருகிறார்கள்.

நாள்தோறும் பந்தல், முகப்பு வேலைகளைக்காண நூற்றுக்கணக்கானவர்கள் நகரின் பல பகுதியிலிருந்தும் சென்றுவருவதோடு வேலைப்பாடுகள் பிரமிப்பையும் நல்ல ஆர்வத்தையும் உண்டாக்கியுள்ளன.

7—1—55 மாலை 4 மணிக்கு நகரின் முக்கிய வீதிகளில் தொண்டர் படையினரின் மாநாட்டு அறிவிப்பு ஊர்வலமும், 8—1—55 காலை 7 மணிக்கு மதுரை புகை வண்டி நிலையத்தில் தலைவர்களுக்கு வரவேற்பும் நடக்க இருக்கிறது.

மாநாட்டுக்கு வரும் தோழர்களின் வசதியைக் கருதி விருதுநகர் நாடார்கள் நள பாகச் சங்கத்தினரால் சுகாதார முறைப்படி சமையல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. உணவுக்கு தனிக் கட்டணம் வேளை 1-க்கு அணா 8" என்று மாநாட்டுச் செயலாளர் தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

சித்தூர் சுப்பிரமணிய பிள்ளைக்கு 'சங்கீத கலாநிதி' விருது

இசைத்துறையில் மொழி வெறுப்பு வேண்டாம்

என்கிறார் பதஞ்சலி சாஸ்திரியார்

சென்னை, ஜன. 3—

" தமிழ் நாட்டில் தமிழ் பாட்டுக்களையே மக்கள் நன்கு அனுபவிக்க முடியும் என்பது மறுக்க முடியாத உண்மை ; ஆனாலும், இசைத் துறையில் மொழிதான் முதன்மையானது என்று கூறிவிட முடியாது ; இசையில், 'நாதம்' அதி முக்கியமானது ; தமிழில் மேன்மேலும் பாடல்கள் இயற்றப்பட்டால் தமிழ் நாட்டில் சங்கீதம் பரவும் என்பது உண்மையே ; என்றாலும், நினைத்த மாத்திரத்திலேயே பாடல்களை உருவாக்கி விட முடியாது ; சாகித்திய மேதைகள் வெகு குறைவு ; பாடல்கள் இயற்ற கவிதா சக்தி பெறுவது அவசியம் ; ஆகவே, ஏராளமான அளவில் உன்னதமான தமிழ்ப் பாடல்கள் இயற்றப்படும் வரையில், தெலுங்கு, மராத்தி மொழியில் உள்ள பாடல்களையே வித்துவான்கள் உபயோகிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது."

" மற்ற மொழிப் பாடல்களைக் கேட்க மறுக்கும் அசட்டுத் தனத்தை தமிழர்கள் கொள்ள மாட்டார்கள் என்றே நம்புகிறேன்; சிலர், சுயநலம் காரணமாக பெரும்பான்மை மக்களுக்குப் புரியாத மொழியில் பாடி ஆதிக்கம் செலுத்துவதாகக் கூறுவது தவறு ; இவ்விதக் கருத்துக்கு இசைத்துறையில் இடமில்லை ; தமிழைத் தவிர இதர மொழிகளில் பாடப்படும் பாட்டுக்களைக் கேட்க மறுக்கும் எண்ணம், அறிவு நிதானமுள்ள தமிழர்களுக்குத் தோன்றாது ; மற்ற துறைகளில் தாண்டவமாடும் 'சகிப்பின்மை' இசைத் துறையிலும் புகவேண்டாம் ; இசையில் மொழி வெறுப்பு வேண்டாம்,"

இவ்வாறு, சங்கீத வித்வத் சபையின் 26-வது மாநாட்டின் 'சதஸ்' மயிலை ரசிகரஞ்சனி சபாவில் நடைபெற்றபோது திரு. பதஞ்சலி சாஸ்திரியார் பேசியிருக்கிறார்.

இசை வல்லுனர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளைக்கு 'சங்கீத கலாநிதி' என்ற விருதும், பட்டமும், அம்மாநாட்டில் வழங்கப்பட்டது.

சென்னையில் திராவிடர் திருநாள்

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்களின் 'கயிறிழுப்புச் சண்டை'

" இந்த ஆண்டு எழும்பூரில் நடைபெற இருக்கும் திராவிடர் திருநாளில் கழகச் சொற்பொழிவாளர்களின் 'கயிறிழுப்புச் சண்டை'யில், (Tug of War) தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், மு. கருணாநிதி, கண்ணதாசன், பொன்னம்பலனார், க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., காஞ்சி-மணிமொழியார், காஞ்சி-கல்யாணசுந்தரம், வி. எம். ஜான், நாஞ்சில் மனோகரன், ஏ. கே. வேலன், முகவை ஆர். எஸ். பாண்டியன், வி. சிவப்பிரகாசம், வி. எஸ். கோவிந்தராசன், எஸ். எஸ். தென்னரசு, கே. ஆர். ராமசாமி, எம். ஜி. ராமச்சந்திரன், டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். ராசேந்திரன் முதலியோர் கலந்து கொள்வதாக ஒப்புதல் அளித்துள்ளனர்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் நடுநிலைமையாளராக இருந்து தீர்ப்பு வழங்குவதுடன், வெற்றி பெறும் குழுவினருக்கு வெள்ளியாலான 'ஷீல்டு' பரிசளிப்பார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்," என்று சென்னை மாவட்ட செயலாளர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

வசதிகள் காணீர்

இந்திய இரயில்வேக்களில் உள்ள 2-வது வகுப்புப் பெட்டிகள் எல்லாவற்றிலும், படிப்பதற்கு மின்சார விளக்குகள், 'ஷவர்' வசதி (குளிப்பதற்கு), முகம் கழுவ பேஸின் தட்டுகள், முகம் பார்க்கும் கண்ணாடிகள் ஆகிய வசதிகள் அமைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஒப்புதலும் மறுப்பும்

ஆகாயத்தில் விமானம் பறந்து செல்லும்போதே, தரையிலிருக்கும் மனிதரையும், மற்றும் பொருட்களையும் தூக்கிக் கொள்ளும் சாதனம் ஒன்று தன்னிடம் இருப்பதை அமெரிக்கா ஒப்புக்கொண்டு விட்டது. ஆனால், இதே மாதிரியான சாதனத்தை ஒரு அமெரிக்க விமானி சீனாவில் உபயோகித்ததாகக் கூறப்பட்டதை மறுத்தது.

'இலங்கைத் தமிழருக்கு சுய ஆட்சி உரிமை வேண்டும்'

'அதுவே பிரச்சினைக்குப் பரிகாரமாகும்'

பெடரல் கட்சித் தலைவர் கருத்து

" இலங்கையின் மத்தியப் பகுதிகளில் குடியேறி, விதிப்படி இலங்கைக் குடிகளாகவே ஆகிவிட்ட 10 லட்சம் தமிழ் மக்களை, இலங்கையிலிருந்து தீவிரமாக வெளியேற்றுவதில் இலங்கை சர்க்கார் முயற்சிக்கையில் இலங்கையில் தமிழ் மொழி பாதுகாக்கப்படும் என்று சொல்ல முடியுமா ?

" இலங்கைத் தமிழரின் நிலைமை நிலையற்றதாக இருப்பதை தமிழர்கள் அனைவரும் அறிவர். அந்த நிலைமைக்குப் பரிகாரம் என்ன என்பது பற்றி மக்களிடையே குழப்பம்தான் நிலவி வருகிறது. இதற்குப் பரிகாரம், ' தமிழர்கள் வாழும் பகுதிகளுக்குச் சுய ஆட்சி உரிமை வழங்குவது ' என்பது ஒன்றுதான். இவற்றைத் தமிழரும் ஒப்புகின்றனர் என்பதையும் நான் அறிவேன். "

—இவ்வாறு, இலங்கை பெடரல் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் யாழ்ப்பாணம்—வடுகோட்டையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசினார் :—

" தமிழ் மக்கள் பிரதிநிதிகளான சட்ட சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையினர், இந்தியப் பரம்பரை—தமிழ் மக்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளை எதிர்ப்பதே கிடையாது. பத்து லட்சம் தமிழர்களை விரட்டுவதில் அக்கறை கொண்டுள்ள சர்க்காரை ஆதரிப்பவர்கள் எவராயினும் அவர்களுடன் எனது கட்சி சேராது. அத்தகையோர், நாம் ஏதாவது ஒரு போராட்டத்தில் ஈடுபடும் போது நடுவில் நம்மைக் கைவிட்டு ஓடி விடுவார்கள் ; அது மட்டுமல்ல—நமது எதிரிகளுடனும் கூடச் சேர்ந்து கொள்வார்கள்."

100 ஆக்ரா வர்த்தகர்களுக்கு சென்னை சர்க்கார் நோட்டீஸ்

மாநிலங்களிடையே நடைபெறும் வர்த்தகத்திற்காக, 1953-ம் ஆண்டு முதற்கொண்டு விற்பனை வரி செலுத்திவிடவேண்டுமென்று சென்னை சர்க்கார் ஆக்ராவிலுள்ள சுமார் நூறு வர்த்தகர்களுக்கு 'நோட்டீஸ்' கொடுத்துள்ளதாம்.

முகவை தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

6-1-55 மாலை 6-30 மணிக்கு, முகவை தி. மு. கழக அலுவலகத்தில், முகவை நகர (இராமநாதபுரம்) தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் முன்னிலையில் நடைபெறும்.

மின்சார இலாகா ஊழியர்கள் மறியல்

மைசூர், ஜன. 5—

வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருக்கும் மைசூர் மாநில மின்சார இலாகா ஊழியர்கள், இன்றுமுதல் எம். பி. எல். காரியாலயம், டிரான்ஸ்பர்மேஷன் ஸ்டேஷன் ஆகியவை முன் மறியல் நடத்துவதென முடிவு செய்துள்ளனராம். 15 பேர்களடங்கிய குழுக்களாக அவர்கள் மறியலில் ஈடுபடலாம் என்று தெரிகிறது.

தடியடிப் பிரயோகம்

நகரில் அமுலிலுள்ள தடையுத்தரவை எதிர்த்து, நேற்று காலை சுமார் 11 மணியளவுக்கு, பெங்களூர் நகர மின்சார இலாகா ஊழியர்கள் பலர் ஒன்று திரண்டு, சிவில் ஸ்டேஷன், பவர்லேட் ஆபீஸ் போன்ற காரியாலயங்களின் முன் மறியல் நடத்தும் நோக்கத்துடன் ஊர்வலமாகச் செல்ல முயற்சிக்கையில், போலீசார் அவர்களை கலைந்து போகச் சொல்லியும் அவர்கள் மறுத்துவிடவே, போலீசார் அவர்கள் மீது தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்கின்றனர். இரண்டு இடங்களில் மொத்தம் 12 பேரைக் கைது செய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

காந்திராமன் கைது

நாகர்கோவில், ஜன. 4—

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான காந்திராமன் இன்று கைது செய்யப்பட்டு சுசீந்திரம் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஜனவரி 25-ந் தேதியன்று நடைபெற இருக்கும் திருவாங்கூர்-கொச்சி சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள தங்களை அனுமதிக்க வேண்டுமென்று காவலில் உள்ள சட்டசபை உறுப்பினர்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு நாளை விசாரணை செய்யப்படும் என்றுதெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ..

நெசவாளர் வறுமை துடைத்திடுவீர்